# 10 புகுமுக அருளடையாளங்கள்

- புகுமுக அருளடையாளங்கள்
  - திருமுழுக்கு
  - நற்கருணை
  - உறுதிப்பூசுதல்

## 1. திருமுழுக்கு



படம் 10.1 - யோர்தான் ஆற்றில் இயேசு திருமுழுக்குப் பெறுதல்

திருமுழுக்கு ஒரு முறை மட்டும் பெறக்கூடிய அருளடையாளமாகும். இறைவனின் பிள்ளை என்ற அழியாத முத்திரை இதனைப் பெறுபவரின் ஆன்மாவில் பதியப்படுகிறது.




## திருமுழுக்கிற்கு பயன்படுத்தப்படும் அடையாளங்கள்.


படம் 10.2 - நீர் ஊற்றுதல்


படம் 10.3 - வெள்ளை ஆடை அணிவிக்கப்படுதல்

### 1. நீர்

பாவத்திற்கு இறந்து அருள் வாழ்விற்கு உயிர்த்தெழுவதை அடையாளப்படுத்துகிறது.

### 2. வெள்ளை ஆடை

கிறிஸ்துவை அணிந்து கொள்ளுதல், (கலா 3:7) ஆன்மீக வாழ்வைத் தூய்மையாக வைத்திருத்தல் ஆகிய வற்றை அடையாளப்படுத்துகிறது.



படம் 10.4 - மெழுகுவர்த்தி ஏற்றுதல்



படம் 10.5 - திருத் தைலம் பூசுதல்

3. பாஸ்கா மெழுகுவர்த்தி
உயிர்த்த இயேசுவினால் புதிய கிறிஸ்தவன் ஒளியாக்கப்பட்டதையும் அந்த ஒளியை அணைந்து போகாமல் வைத்திருக்க வேண்டும் என்பதையும் அடையாளப்படுத்துகிறது.

4. திருத் தைலம்
தூய ஆவியின் வரம் கிடைப்பதை அடையாளப்படுத்துகிறது.

## 2. உறுதிப் பூசுதல்

(மாதாவே துணை நீரே உம்மை.... என்ற மெட்டில் இப் பாடலைப் பாடவும்)



பெந்தகோஸ்து நாளன்று திருத்தூதர் மீது தூய ஆவி எழுந்தருளியதைப் போன்று இன்று உறுதிப்பூசுதல் என்னும் அருளடையாளத்தினால் எம் மீதும் தூய ஆவி எழுந்தருளி வருகிறார். எந்த ஒரு செயற்பாட்டையும் செய்யும் முன்னர் தூய ஆவியிடம் செபிப்பதால் அவரின் வழிகாட்டல், வலிமை ஆகியவற்றைக் குறைவின்றிப் பெற்றுக்கொள்கிறோம். அவ்வாறே திருமுழுக்கினால் நாம் பெற்றுள்ள புதிய வாழ்வு உறுதிப்பூசுதலின் மூலம் உறுதி பெறுகிறது. மேலும் முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவனாக சான்று பகர்ந்து வாழும் பொறுப்பு எமக்கு இவ்வருளடையாளம்மூலம் தரப்படுகின்றது.

### 3. நற்கருணை



படம் 10.6 - ஆண்டவரின் திருவிருந்து

> பின்பு அவர் அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அதைப்பிட்டுஅவர்களுக்குக் கொடுத்து, இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்றார்.
>
> (லூக் 22 : 19)

ஆண்டவரின் இறுதி இரா உணவின்போது மேற்கூறிய வார்த்தைகளைக் கூறி இயேசு, நற்கருணையை ஏற்படுத்தினார். புகுமுக அருளடையாளங்கள் தேவநற்கருணை பெற்றுக்கொள்வதுடன் நிறைவடைகிறது.

## லஞ்சியோனாவில் நற்கருணை புதுமை



படம் 10.7 - தேவநற்கருணை புதுமை

நற்கருணை புதுமை நடைபெற்ற காலம் - கி.பி. 700 ஆம் ஆண்டளவில்

புதுமை நடைபெற்ற இடம் :- இத்தாலியில் லஞ்சியோனா நகர புனித எலகோன்சியன் ஆலயம்

நடைபெற்ற புதுமை :- அப்பமும் இரசமும் உண்மையாகவே இயேசுவின் திரு உடலாகவும் திரு இரத்தமாகவும் மாறுகின்றதா என சந்தேகித்த ஒரு துறவற சபை குருவானவர், திருப்பலியின் வசீகரப் பகுதி வேளையிலே அப்பம் ஒரு தசைத் துண்டாகவும் இரசம் இரத்தமாகவும் மாறியிருப்பதைக் கண்டார்.

### 1574 இல் விஞ்ஞானிகளின் ஆய்வின்போது கிடைத்த பெறுபேறு.

உறைந்து போன சமனற்ற பல வடிவ இரத்தக்கட்டிகளை நிறுத்துப் பார்த்த பொழுது ஒவ்வொரு கட்டியும் ஒரே நிறையுடையனவாக இருந்தன. அதே போன்று எல்லாக் கட்டிகளையும் ஒன்றாக நிறுக்கும்போது அவற்றின் நிறையும் ஓர் இரத்தக் கட்டியின் நிறையை ஒத்ததாக இருந்தது.

### 1978 ஆம் ஆண்டு செய்த விஞ்ஞானப் பரிசோதனையின் பெறுபேறு

- ★ சதைத்துண்டும் இரத்தமும் உண்மையாகவே ஒரு மனிதருடையது எனவும் சதைத்துண்டு மனித இதயத்திலிருந்து எடுக்கப்பட்டது எனவும் வெளிப்படுத்தப்பட்டது.

- ★ அந்த சதைத்துண்டும் இரத்தமும் " AB பொசிட்டிவ்" இரத்த வகையைச் சேர்ந்தது.
- ★ உடலில் புதிதாக பெற்றுள்ள இரத்தத்தைப் போல புரதப் பொருள், தாதுப் பொருள் அகற்றப்படாது தொடர்ந்து தங்கியிருக்கிறது.
- ★ தசைத் துண்டிற்கும் இரத்தத்திற்கும் நீண்ட நாள் பாதுகாப்பதற்கான எவ்வித இரசாயனக் கலவையும் பயன்படுத்தப்படவில்லை.
- ★ 12 நூற்றாண்டுகளுக்கும் அதிகமாக - மாற்றங்கள் இருப்பினும் இந்த சதைத்துண்டும் இரத்தமும் கெட்டுப் போகவில்லை.

### *1970 ஆம் ஆண்டு செய்த பரிசோதனையில்*

டியுரின் நகர மாபெரும் கூட்டத்தில், லன்சியானோ நகர சதைத் துண்டிலும் இரத்தத்திலும் "AB பொசிட்டிவ்" இரத்த வகை இருப்பதாக நாசா நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது.

இதனால் இயேசு உயிருடன் எழுந்தருளியிருக்கும் நற்கருணையை, நாம் அதிக ஆர்வத்துடனும் மதிப்புடனும் பக்தியுடனும் அடிக்கடி பெற்றுக் கொள்ள வேண்டும். அதனால் எமது வாழ்வு ஊட்டம் பெறுவதோடு இறையருளினால் நிறைவுபெற்று வளர்ச்சியடைகிறது. ஆதலால் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் நற்கருணை உட்கொள்ள வேண்டும்.

**செயற்பாடு**

1. திருமுழுக்கினால் நீர் பெற்றுள்ள புதிய வாழ்வை எவ்வாறு வளர்த்துக்கொள்ளலாம்?
2. பெந்தகோஸ்து தினம் தொடர்பான பாடலிலிருந்து நீர் கற்றுக்கொள்ளும் விடயங்கள் ஐந்தை எழுதுக.



***வாழ்க்கைக்கு......***

*சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் திருப்பலியில் பங்கு கொண்டு நற்கருணை ஆண்டவரைப் பெற்றுக்கொள்ளுங்கள்.*